

# ஓய்வுநாளுக்காக உறுதியுடன்

*ஓய்வுநாளை தான் கனப்படுத்தியதால் தேவன் தன்னைக் கனப்படுத்தியதை அனா அறிந்துகொண்டார்.*

அனாவுக்கு செவந்த்-டே அட்வென்டிஸ்டாக மாற விருப்பமில்லை. பிலிப்பைன்ஸில் தன் சிறுவயதில் செல்கிற சபைதான் பிடித்திருந்தது; ஞாயிற்றுக்கிழமைக்கு பதிலாக சனிக்கிழமையில் ஆராதனை செய்யவும் விருப்பமில்லை. அழுதார், அழுதார். ஆனால் வேதாகமத்தை ஆராய்ந்தபோது, ஏழாம் நாள்தான் ஓய்வுநாள் என்கிற நம்பிக்கை உறுதியானது. அட்வென்டிஸ்டாக மாறினார்.

அதன்பிறகு வேலையில் பிரச்சினை வந்தது.

அரசு மேல்நிலை பள்ளியில் கணக்குப் பாடம் நடத்தினார் அனா. ஆசிரியையாக அவர் வேலை பார்த்த முதல் வருடம் அது; முதுநிலை பட்டம் பெறுவதற்கு சனிக்கிழமைகளிலும் வகுப்புகள் எடுக்க வேண்டும். அரசுப்பள்ளிகளுக்கான கண்காணிப்பாளரிடம் அனா பேசினார்.

“சனிக்கிழமை வகுப்புகளை என்னால் நடத்தமுடியாது, ஏனென்றால் நான் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் கிறிஸ்தவள்” என்று சொன்னார்.

“சனிக்கிழமை வகுப்புகளை நடத்தாவிட்டால், வேலை போய்விடும்” என்று கண்காணிப்பாளர் சொன்னார்.

அனா திகைத்துவிட்டார். அவருடைய சம்பாத்தியத்தில்தான் குடும்ப பிழைப்பு நடந்தது. எனவே, ஒரு பருவ ஆண்டு முழுவதும் சனிக்கிழமை வகுப்புகளுக்குச் சென்றார். ஆனால் மனசாட்சி உறுத்தியது; இறுதியாக வகுப்புகளுக்குச் செல்லுவதை நிறுத்திவிட்டார்.

“என்னால் முடியாது” என்றார்.

“அதனால் உங்களுடைய வேலை போகப்போவதில்லை” என்று கண்காணிப்பாளர் சொன்னார். அனாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்தக் காரணத்திற்காக தன்னை வேலையை விட்டு நீக்கமுடியாது என்பதை அனா அறிந்துகொண்டார். முதலில் சனிக்கிழமைகளில் வகுப்புகளுக்கு வரமுடியாது என்று கேட்டசமயத்தில், பயிற்சிக்காலத்தில் இருந்தார். ஆனால் அந்தப் பயிற்சிக்காலம் முடிந்துவிட்டது; அதனால் அவரை வேலையைவிட்டுத் தூக்கமுடியாது. எனவே, இனி ஓய்வுநாளை மீறப்போவதே இல்லையென முடிவெடுத்தார்.

அந்தப் பள்ளியில் ஒன்பது வருடங்கள் வேலைபார்த்தார்.

அங்கு வேலைசெய்தபோது, அமெரிக்காவில் ஆசிரியை பணிக்காக விண்ணப்பித்தபோது, புதிதாக ஓய்வுநாள் சோதனை வந்தது. கலிஃபோர்னியாவில் ஒரு பள்ளியில் அவரை நேர்முகக்காணலுக்கு அழைத்திருந்தார்கள்; ஆனால், அது சனிக்கிழமையில் வந்தது.

“சனிக்கிழமையில் என்னால் செல்லமுடியாது, அன்று நான் ஆலயத்திற்குச் செல்லவேண்டும்” என்று வேலைக்கு ஆள் எடுப்பவரிடம் அனா சொன்னார்.

எனவே, அமெரிக்காவில் தான் வேலைசெய்வது தேவனுடைய சித்தமல்ல என்று முடிவுசெய்தார். அதனால் வேலைக்கு எடுப்பவரிடம், “எனக்கு வேலையே வேண்டாம். என்னுடைய விண்ணப்பத்தை இனி நீங்கள் யாருக்கும் கொடுக்கவேண்டாம்” என்று கூறினார்.

ஒரு மாதம் கடந்தது; அந்த வேலைவாய்ப்பு நிறுவனத்திலிருந்து மீண்டும் அழைப்பு வந்தது. அரிசோனாவில் ஒரு பள்ளியில் உங்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புள்ளது என்று தெரிவித்தது.

“சனிக்கிழமை தவிர வேறு எந்த நாளாக இருந்தாலும் நேர்முகத் தேர்வுக்குச் செல்லுவேன்” என்று சொன்னார்.

“அது பிரச்சினையில்லை” என்று அந்த நிறுவனம் தெரிவித்தது.

வெள்ளிக்கிழமையில் அனாவுக்கு நேர்முகத் தேர்வு நடைபெற்றது. நான்கு நாட்கள் கழித்து அனாவுக்கு வேலை கிடைத்தது.

அனா தேவனைத் துதித்தார்.

தன் ராஜினாமா கடிதத்துடன் அனா கண்காணிப்பாளரிடம் சென்றபோது, அவர் மிகவும் ஆச்சரியமடைந்தார். ஏனென்றால், அந்தக் கண்காணிப்பாளர் அமெரிக்காவில் வேலை கிடைப்பதற்காக பலமுறை விண்ணப்பித்திருந்தும், அவருக்கு வேலை கிடைக்கவில்லை என்பதை பின்னர்தான் அனா அறிந்துகொண்டார்.

ஓய்வுநாளை தான் கனப்படுத்தியதால் தேவன் தன்னைக் கனப்படுத்தியதை அனா அறிந்துகொண்டார்.

ஓய்வுநாள் சோதனை அமெரிக்கா சென்ற பிறகு ஓய்ந்துவிடவில்லை. அவர் அரிசோனாவிற்குச் சென்று சில நாட்களில், சனிக்கிழ

மைகளில் சிறப்பு பயிற்சி வகுப்புகளில் ஆசிரியர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்று பள்ளியின் முதல்வர் அறிவித்தார். ‘ஆண்டவரே, உம்முடைய உதவியால்தான் இங்கு வந்திருக்கிறேன், இப்போதும் நீர்தாம் எனக்கு உதவி செய்யவேண்டும்’’ என்று அனா ஜெபித்தார்.

பள்ளிமுதல்வரைச் சந்தித்தார். ‘‘என்னால் அந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ள முடியாது. வாரத்தின் ஏழாம் நாள் பரிசுத்தமான நாள், அதை நான் பரிசுத்தமாக ஆசரிக்கவேண்டும்’’ என்று கூறினார்.

பள்ளிமுதல்சம்மதிக்கவில்லை. ‘‘சனிக்கிழமைபயிற்சிவகுப்புகளில் கலந்துகொள்ளாவிட்டால், உங்களை வேலையைவிட்டுத் தூக்க நேரிடும்’’ என்று கூறிவிட்டார்.

அனா விடவில்லை. ‘‘அமெரிக்காவில் மதசுதந்தரம் உள்ளது. ஓய்வுநாளைக் கைக்கொண்டதால்தான் நான் இந்த நிலைக்கு வந்திருக்கிறேன்’’ என்று சொன்னார்.

பிறகு, தன் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்; ஓய்வுநாள் குறித்து முதல்வருக்கு சுருக்கமாக வேதாகமத்திலிருந்து விளக்கினார்.

பள்ளி முதல்வருக்கு நெருக்கடியாக இருந்தாலும், அரசு பள்ளிகளுக்கான அந்நகரத்தின் கண்காணிப்பாளர் அனுமதித்தால், தனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லையெனத் தெரிவித்தார்.

அனா அந்தக் கண்காணிப்பாளரிடம் பேசினார்; அவர் அனுமதி வழங்கி, ஒரு கடிதம் கொடுத்தார். ‘‘நீங்கள் எந்த நாளிலும் தேவனை ஆராதிக்கலாம்’’ என்று கூறினார்.

அனா அந்தக் கடிதத்தை பள்ளி முதல்வரிடம் கொடுத்தார்.

‘‘சரி, நீங்கள் கலந்துகொள்ள அவசியமில்லை. ஆனால் அன்று நடக்கிற பயிற்சிகளை நீங்கள் சொந்தமாகத்தான் கற்றுக்கொள்ள வேண்டும்’’ என்று கூறினார்.

அதை எப்படி படிப்பதென அனாவுக்குத் தெரியவில்லை. ஜெபித்தார். அடுத்த நாள், அந்தப்பயிற்சியைக் கொடுக்கிற ஆசிரியரை பள்ளியில் சந்தித்தார். ‘‘நான் ஒரு செவந்த்-டே அட்வென்டிஸ்ட் கிறிஸ்தவள்; வாரத்தின் ஏழாம் நாளை நான் பரிசுத்தமாகக் கைக்கொள்ள வேண்டும். என்னால் பயிற்சி வகுப்புகளுக்கு வரமுடியாது’’ என்று சொன்னார்.

‘‘நாம் பள்ளிமுதல்வரிடம் செல்லுவோம், நான் அவரிடம் ஒன்றைச் சொல்லவேண்டும்’’ என்று அந்தப் பயிற்சியாளர் கூறினார்.

பள்ளி முதல்வரின் அலுவலகத்தில், ‘‘அனாவுக்கு மட்டும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு வகுப்பு நடத்த விரும்புகிறேன்’’ என்று கூறினார்.

‘‘சரி, அப்படியானால் பிரச்சினை தீர்ந்தது’’ என்று பள்ளி முதல்வர் கூறினார். பிறகு அனாவிடம் சாந்தமாகத் திரும்பி, ‘‘நீங்கள் உண்மையாக இருப்பதால்தான் தேவன் உங்களை ஆசீர்வதித்திருக்கிறார்’’ என்று கூறினார்.

அதன்பிறகு, பள்ளி முதல்வருக்கும் அனாவுக்கும் இடையே நல்ல நட்பு உண்டானது. அனா ஒரு தந்தைபோல நடந்துகொண்டார்.